திராவிடநாடு

4–12–60 | வார வெளியீடு | விலை 16 காசு

தடை விதிக்காதே!

[ச. கோபால்]

—:○:—

இருள்நீக்கி ஒளிவழங்கும் முழும திக்கு
இரும்பாலே திரையொன்று போட்ட போதும்
தருகின்ற ஒளிநமக்குத் தந்தே தீரும்;
தடுக்கின்ற எவராலும் சாவு இல்லை.
பெருகிவரும் பெருவெள்ளம் எந்த நாளும்
போட்டுவிட்ட மண்ணணையால் நிற்ப தில்லை.
அருவிதரும் நீர்த்திரளை உள்ளங் கையால்
அடக்கிடலாம் எனும்முயற்சி பயனே இல்லை.

பொங்கியெழும் விடுதலைப்போர்ப் படையின் முன்னர்
போடுகின்ற தடையனைத்தும் உடைந்தே போகும்
பொங்கிவரும் கொடுங்கோல் ஆட்சி ஓர்நாள்
மாய்ந்துவிடும் காய்ந்துவிடும் தீய்ந்தே போகும்
தங்கியுள்ள இருள்விலங்கும் தகர்ந்து போகும்
தங்கநிகர் ஒளிபாய்ச்சும் பரிதி யாலே!
இங்கிருக்கும் இருளாட்சி அகன்று நாளை
இனியநல்ல ஆட்சிதோன்றும் கழகத் தாலே!

அந்திக்கலம்பக

கேள்விப்பட்டதும், இடுகிடுன்னு நடுங்கிப்போய்விட்டேண்டி பொன்னி! பின்கட்டுப் பூராவும் மளமளன்னு சரிந்துபோய்விட்டதுன்னு, பால்காரி சொன்னு, பதறிப்போய்விட்டேன். என்ன நேரிட்டதோ என்னமோன்னு திகில், உடனே வரணும்னு துடியாத் துடித்தேன். மழை விட்டாத்தானே. கொஞ்சம் தணிந்தது, ஓடோடி வந்தேன்.

நீங்க பயப்படுவிங்கன்னு எனக்குத் தெரியுமே! பின்கட்டுச் சுவர் இடியறபோது, நான் உங்களைத்தான் நினைத்துக்கொண்டேன்.

ஆபத்து இல்லையே, யாருக்கும்; அதைச் சொல்லு முதலிலே; நீ எங்கே இருந்தே, அப்போ?

ஆபத்து ஏற்பட்டிருந்தா ஆஸ்பத்திரியிலே அல்லவா இருந்திருப்பேன். நல்லவேளையாக ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை. நான் முன்கட்டிலேதான் இருந்தேன் — மழை கொட்டுகொட்டுன்னு கொட்டும்போதே, எனக்குத் தெரியும், பின்கட்டு இந்த மழைக்கு நிற்காதுன்னு. அதனாலே நான் அந்தப்பக்கம், தலைகாட்டவே இல்லை.

அவர் எங்கே இருந்தார்—வீட்டிலேதானே?

இல்லையே. அவர், சாப்பாட்டுப் பொட்டலங்களைக் கொடுத்துக்கொண்டிருந்தார், வேறு பக்கத்திலே.

உன்னைத் தனியாக விட்டுவிட்டுப் போக, எப்படி மனம்வந்தது அவருக்கு?

நானேதான் போகச்சொன்னேன். நாமாவது கல்கட்டடத்திலே இருக்கிறோம். குடிசைகளிலே இருக்கிற மக்களுக்கு இந்த மழையாலே ஏற்பட்ட அவதி கொஞ்சமா, அதனாலே, அவர்களுக்கு, முடிந்த அளவுக்கு உதவி செய்யவேணுமல்லவா? அந்தக் காரியத்தைப் போய்க் கவனிக்கச் சொன்னேன்.

★ சி. என். ஏ. ★



நெஞ்சழுத்தக்காரியாச்சே, நீ. ஊரே திகில்பட்டுக்கொண்டு இருக்குது...... தனியா இருக்கறே நீ— அவரையும் வெளியே போகச் சொல்லிவிட்டு.

எனக்கும் வீட்டிலே இருக்க இஷ்டமில்லே. அவர் கூடவே போகணும், நம்மாலான உதவியைச் செய்யணும்னு எண்ணம். பொன்னி! நீ வந்து என்ன செய்ய முடியும்? சில இடத்திலே இடுப்பளவுக்குத் தண்ணியா இருக்குதாம்! ஒரே வெள்ளக்காடு. உன்னை அழைத்துக்கொண்டுபோனு, பிறகு உன்னைக் கவனிக்கற வேலைதான் எனக்கு இருக்கும் என்று சொல்லித் தடுத்துவிட்டார்.

நல்ல வேலைதான் செய்தார். அதுமட்டும். நீ வேறு போய், எங்காவது கால் இடறி விழுந்து தொலைச்சிருந்தா......

பொன்னி போய்விட்டான்னு ஒரு நாலுநாளைக்கு அழப்போறிங்க. கூடவேவா, பிராணனை விட்டு விடப்போறிங்க.

போடி போக்கிரி! யார்தான், அப்படி செய்வா?

அப்படித்தான் சொல்லுவிங்க. ஆனு, தெரியுமா, உங்களுக்கு; மகளுக்கு ஆபத்து என்று கண்டதும் தகப்பனுருக்கு, மயக்கம், மாரடைப்பு!

பெண்ணின் பேரிலே, பிராணனையே வைத்துக்கொண்டிருந்தார் போலிருக்கு.

ஆமாம். அதனாலேதான் பொண்ணுக்கு ஆபத்தான வலி கண்டதும், அய்யோ! அம்மான்னு! அலறினர்; மாரடைப்பு ஏற்பட்டு துடித்தார்...... அதைப் பார்த்ததும் பொண்ணு, அலறி அய்யோ! அப்பான்னு கூவிக் கீழே சாய்ந்தது. இரண்டுபேரும் போய்விட்டாங்க......

ஐயயோ! இது என்ன அநியாயம் பொன்னி! இப்படியா ஒரு குடும்பத்துக்குப் பேரிடி ஏற்படணும்.

ஊரே கண்ணீர்வடித்தது; ஜூபிடர் படக் கம்பெனி சோமுவும் அவர் மகள் சாந்தாவும் ஒரே நேரத்திலே உயிர் துறந்ததைக் கேள்விப்பட்டு.

கேட்கும்போதே, துக்கம் துளைக்கிறது பொன்னி! எப்படித்தான், தாங்கிக்கொள்ளும் அந்தக் குடும்பம்?

எத்தனையோ குடும்பங்களுக்கு வாழ்வு அளித்த குடும்பம்; அந்தக் குடும்பத்துக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. ஒரு மாதம் இரண்டு மாதம் நோயால் படுத்து, பல டாக்டர்கள் பார்த்துப் பிழைக்கறது கஷ்டம்னு சொல்லி, இழுத்து, இளைகட்டி, இருமி, செத்தாலேகூட துக்கத்தை அடக்கிக்கொள்ள முடியாது. இந்தச் சாவு—நெனைக்கும் போதே நெஞ்சிலே நெருப்பைக் கொட்டுகிறதுபோல இருக்குதே... உம்!

என்ன செய்வது! மாரடைப்பு அப்படித்தான். சில விநாடிதான். பிராணன் போய்விடுது...

பொன்னி! இப்ப அடிக்கடி, மாரடைப்பாலே செத்துவிட்டா என்கிற செய்தி அதிகமாயிண்டே இருக்கு.

ஆமாமாம்! சோமுகூட, பகல் ஒரு மணிக்குக்கூட, நன்றாகப் பேசிக்கொண்டுதான் இருந்திருக்கிறாராம். பத்தே நிமிஷம். மாரடைக்குதுன்னு சொல்லித் துடித்திருக்கிறார். உயிர் போய்விட்டிருக்குது.

என்னமோ, அண்டத்தை அளக்கக் கற்றுக்கொண்டோம், அணுவைப் பிளந்துவிட்டோம்னு, பேசிக்கொண்டிருக்கா பெருமையா! சந்திரமண்டலம் போகப்போறோம் என்கிறு. செவ்வாமண்டலம் பார் என்று படம் காட்டுகிறு. இந்த மாரடைப்பைத் தடுத்து நிறுத்த ஒரு நல்ல மருந்து கண்டுபிடிக்கக் காணோம். இருக்கறதை நாசமாக்கத்தான் ஒவ்வொரு நாளும் புதுசு புதுசா வித்தைகளைக் கத்துக்கொண்டிருக்கா...... அற்புதமான யுகம் என்கிறு! அதிசயம் அடுக்கடுக்கா காட்டுவதாச் சொல்று! என்ன பிரயோஜனம்? காலம், பொன்னி! உண்மையான பெருமை உள்ளதுன்னு எனக்குத் தோணல்லே...

ஒரே அடியா, அப்படிச் சொல்லிவிடலாமா? எந்தக் காலத்திலேயும் அழிவு, ஆபத்து, நோய், சாவு இருந்துகொண்டுதான் இருக்கும். இந்தக் காலத்திலேயாவது, சில நோய்களுக்குத்தான் சரியான மருந்துகள் இன்னமும் முறையாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. தவிர, எத்தனையோ வியாதிகளுக்கு மருந்து தயாராகிவிட்டிருக்குது.

நீதான் மெச்சிக்கொள்ளணும், இந்தக்காலத்துடைய, அருமை பெருமையை.

புண்யகாலம்னு பெருமையாப் பேசிக்கொள்கிறோமே, பாரதகாலம் அப்ப, திருதிராஷ்டிர மன்னருக்குக் கண் குருடாத்தானே இருந்தது. எந்தத்தவசி பச்சிலைபோட்டு குருடுபோகச் செய்தார்? திருதிராஷ்டிரனுடைய கண் சரியா இருந்திருந்தா, பாரதத்திலே பாதிக்கு மேலே நடந்திருக்காதே...

பொன்னி! இது நல்லா இல்லே' ஆமாம்! நான் ஏதாவது சொன்னு' நீ, உடனே புராணத்தின் பேரிலே பாய்வது ஏன்? அந்தப் பேச்சை எடுக்காவிட்டா, தூக்கம் பிடிக்காதா, உனக்கு?

கோபம் வருவது இருக்கட்டும். அந்தக் காலத்திலே, திருதிராஷ்டிரருக்கு, ஏன் கண்பார்வை சரியாகும்படி, எந்த மருந்தும், யாரும், கொடுக்கல்லே? சொல்லுங்க, கேட்போம்.

போங்கேளு, பாரதப் பிரசங்கியை. ஓங்கிக் கன்னத்திலே கொடுப்பான், இரண்டு.

அவ்வளவுதானே! கேள்விக்குப் பதில் கொடுக்கமாட்டாரே? முடியாதே!

உனக்கு உங்க கட்சிப் பத்திரிகைகளைப் படிச்சிப் படிச்சி, துணிச்சல் அதிகமாகிவிட்டது. கொஞ்சம் கூடப் பயம் இல்லாமல், புராண இதிகாசங்களைக் கேலி பேசறே. எங்களவர் சொன்னர்; அவரோடு ஆபீசிலே வேலைபார்க்கிறவர், ஜாவா போயிருந்தாராம்; அங்கே என்ன கண்டாராம் தெரியுமோ?

ஜாவாவிலே சர்க்கரை ஏராளம்னு சொல்லக்கேட்டிருக்கறேன்.

போதும் பொன்னி. உன்னோட கேலியும் கிண்டலும். ஜாவாவிலே நம்மோட ராமாயணம், பாரதம் இருக்கே, அவையெல்லாம், இருக்காமே! நாடகம் உண்டாம்; ராம நாடகம்! நாட்டியம் நடத்துகிறார்களாம், ராமாயணக் கதையை...

அதைச் சொல்கிறீர்களா? இது எனக்கு முன்பே தெரியுமே. போய் வந்தவர்கள் எழுதியிருக்கிற புத்தகத்திலே, பக்கம் பக்கமா இருக்கிறதே. படங்கள்கூடப் போட்டிருக்கிறார்கள்.

அப்படி, உலகம் முழுவதும் பரவி, எல்லோரும் ஒப்புக்கொண்டு இருக்கிற புண்ய கதைகளையெல்லாம் பொன்னி! நீ, எப்பவும் கண்

டித்துப் பேசறதும், கேலியாப் பேசறதும் போக்கிரித்தனம்னு நான் சொல்றேன்...

சொல்லுங்கோ! போக்கிரித்தனம்னு மட்டும் நீங்க சொல்றிங்க. ஆத்திரத்தை அடக்கமுடியாத பலர், வாய் புழுத்துப்போகும், நாக்கு அழுகி கீழே விழும் என்றெல்லாம் சாபம் கொடுத்துப் பேசக் கேட்டிருக்கிறேன்.

யார் என்ன சொன்னாலும், நான் மட்டும், என் போக்கை மாற்றிக் கொள்ளப் போவது இல்லையாதுன்னு பிடிவாதம்... உம்! அப்படித்தானே?

பிடிவாதம்னு சொல்லி, கண்டித்துப் பேசுவது, உங்களோட கட்சி, உறுதின்னு எண்ணிக்கொண்டு, உண்மைக்காகப் பரிந்து பேசுவது, எங்கள் கட்சி.

கட்சிகளெல்லாவற்றையும் தூக்கிக் குப்பைக் கூடையிலே போடு...

அப்படியா! அது, ஜெயப்பிரகாஷ் நாராயணன் கட்சியுடைய திட்டம்! கட்சிகளே இருக்கத் தேவையில்லை. கட்சிகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு, அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சியை நடத்துவது, பல கேடுகளுக்கு வழி ஏற்படுத்தி விடுகிறது, ஆகையாலே, கட்சிகளே கூடாது என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறிக்கொண்டிருக்கிறார் — அதற்காக ஒரு தனிக் கட்சி!!

பொன்னி! ஆயிரம் கட்சிகள்கூட இருந்து தொலைக்கட்டும் — ஆனாலும், புராண இதிகாசங்களைக் கண்டிக்கிறதையே வேலையாகக் கொண்டு, ஒரு கட்சி இருக்கத்தான் வேணுமா? யோசனைசெய்து பார்த்துச் சொல்லு...... அவசரப்படாமல், ஆத்திரம் கொள்ளாமல், பேசு...

யோசித்துப் பார்த்தா, இதற்கு ஒரு கட்சி கூடாது என்றுதான் எனக்கும் தோணுது...

அப்படிச் சொல்லு... வந்தயா, வழிக்கு...

ஆமாம்! இதற்கு ஒரு கட்சி இருந்தா, மற்ற கட்சிகள், வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்குக் கிளம்புகின்றன. அதனாலே, எல்லாக் கட்சிகளுமே, புராணங்களிலே உள்ள புரட்டுகளை அம்பலப்படுத்தும் வேலையிலே, ஈடுபட்டு, இந்தக் காரியத்தை ஒரு கட்சிப் பிரச்சினையாக்காமல், நாட்டுப் பிரச்சினையாக மாற்றிவிட்டா, அறிவுக்கு ஆட்சி கிடைக்கும்.

என் பேச்சைக்கொண்டே என்னை மடக்கிவிட்டயா... உம்! உன்னோடு, பேசி, நான் ஏன், வீணா என் மனதுக்குச் சஞ்சலத்தைத் தேடிக்கொள்ளணும். நீ, வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசு; ராமாயணத்தை ஆபாசக் களஞ்சியம்னு பேசு; பாரதம் படுமோசம்னு கண்டித்துக் கூச்சல்போடு! எனக்கென்ன!! உன் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்தால்தானே, கோபம் உண்டாகும்...

கோபமே, வராதா? உண்மையாகவா?

பைத்யக்காரி எதை எதையோ உளறிண்டு போகட்டும், நமக்கென்னவென்று இருந்துவிடப் போறேன்... இனிமேல்...

அப்படியா? எதைச் சொன்னாலுமா?

ஆமாம்! ஆமாம்! ஆமாம்!

அடே அப்பா! அவ்வளவு துணிச்சல் ஏற்பட்டுவிட்டதா, உங்களுக்கு. கோபமே ஏற்படாதா! உம்! ராமனும் சீதையும் அண்ணன் தங்கை என்று சொன்னாக்கூட கோபம் வராதா, உங்களுக்கு.

நீதானே, சொல்றே, உன்னோட அபாரமான அறிவுத்திறமையாலே — இராமனும் சீதையும், அண்ணன் தங்கைன்னு...... சொல்லு...... சீதையை யார், கட்டிண்டாளோ, உன்னோட அடாவடி இராமாணத்திலே......

என்னோட இராமாயணமா, அடாவடி இராமாயணமா என்பது கிடக்கட்டும். சீதை, இராமனைத்தான் திருமணம் செய்துகொள்கிறதாக, நானும் சொல்றேன்.

கல்யாணம் செய்துகொண்டது இராமனைத்தான் — ஆனா சீதை...!

சீதை, இராமனுடைய தங்கை...

பொன்னி! ஏண்டி இப்படி அக்கிரமமா, பகவானைப்பழிச்சுப் பேசறே...

(14-ம் பக்கம் பார்க்க)

என்னென்பது இதனை!

அண்மையில் பெய்த பெருமழையாலும் கடுங்காற்றாலும் பரவலாகத் தமிழ்நாடெங்கணும் பெருமளவில் சேதம் ஏற்பட்டது. குறிப்பாகச் சென்னை நகரையும், தஞ்சை மாவட்டத்தையும் அதிக அளவில் பாழ்படுத்திவிட்டது.

* * *

இந்த நிலையில், தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலையில் அமைந்திருக்கும் சுப்பிரமணியருக்கு (கடவுள்) தங்கத்தால் அர்ச்சனை நடக்கிறது. சுமார் 30,000 ரூபா பெறுமானமுள்ள தங்கத்தை 1008 மலர்களாகச்செய்து, அவற்றைஅங்குள்ள சுப்பிரமணியர் உருவத்தின்மீது 'அர்ச்சனை' என்ற பெயரால் தூவப்படும் ஒரு விழா இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது: இந்த விழா வருகிற மாசித் திங்கள் வரை நடைபெறுமாம்.

* * *

மக்கள் மழையால் அவதிப்படுகின்றார்கள்.

* * *

மகேசன் தங்கத்தால் அர்ச்சிக்கப்படுகிறார்.

தங்கத்தால் அர்ச்சிக்கப்படும் சுவாமிநாத சுவாமி எழுந்தருளியிருக்கும் ஊருக்கு மிக அண்மையிலுள்ள பாபநாசம், ஆளிச்சாவடி, கிளியூர், குழிக்குடி, அம்மாப்பேட்டை, சாலியமங்கலம் முதலான ஊர்களில் பெருமழையாலும் காற்றாலும் அங்குள்ள மக்கள் கஞ்சிக்கும் வழியின்றிக் கதறிக்கொண்டுள்ளனர்.

* * *

அந்த வட்டத் தாசில்தார் பெருமுயற்சி எடுத்துக் கஞ்சித் தொட்டிகளை ஏற்படுத்தி ஏழைகளைக் காப்பாற்ற முயன்று வருகிறார்.

* * *

தஞ்சைப் பகுதியில் 40,000-க்கு மேற்பட்ட ஏக்கர்களிலுள்ள நெற்பயிர்கள் சேதமடைந்துவிட்டன,

* * *

நாகை, தரங்கம்பாடி முதலான இடங்களில்அளவிட இயலாத அளவுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது. —

* * *

தண்ணீருக்கு நடுவே அகப்பட்டு மீள முடியாது தவிக்கும் நூற்றுக்கணக்கான ஏழைகளைக் காப்பாற்றும் பொறுப்பில் இருப்பதாகக் கூறப்படும் கடவுளோ தங்கத்தால் தன்னை அர்ச்சிக்கும்படி பக்த கோடிகளுக்குக் கட்டளையிடுகிறார்.

இது வேடிக்கையா? விபரீதமா? வீணாட்டமா? கேலிக்கூத்தா? கேட்பாரற்ற போக்கா? அந்தோ ஆண்டவனே! இதனை என்னென்பது? கூறமுடியுமா உன்னால்?



காஞ்சீபுரம்

4–12–60.

தம்பி!

எல்லோரும் இந்நாட்டு மன்னர்—என்பதுபற்றிய விளக்கம் தரத் தொடங்கிப், பேரறிவாளர் பெர்னுட்ஷா காட்டிய மன்னனைக் குறித்துக் கருத்தினைச் செலுத்திக் கொண்டிருந்தோம் அல்லவா—இடையிலே சென்றகிழமை—சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர் தேர்தல்பற்றி எழுந்த நிலைமைகள், என்னை அவ்வழி இழுத்துச் சென்றதால், நாம், மன்னனை மறந்தோம். இதோ, மீண்டும் முடிதரித்தோன்.

நினைவிலிருக்கிறதல்லவா, குடிஅரசுக் கோட்பாட்டினை ஏற்றுக்கொண்ட மன்னன்—முடிஅரசு முறையின் மூலத்தைக் கல்லி எறியத் தேவையில்லை, அதனை ஓர் சின்னமாக, அணியாக வைத்துக்கொண்டு, மக்களாட்சியை நடாத்திச்செல்ல இயலும் என்ற நம்பிக்கையுடன் நாடாளும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட, அமைச்சர்கள். அவர்களில் ஒருவனை, மன்னன் தித்திப்புப் பேச்சுமூலமே, தீர்த்துக்கட்டிவிட முனைந்த கட்டம்! எதிர்த்துப் பேசச்சென்று, இளித்துவிட்டுத்திரும்பிய அவன் போக்கு—இதனைக் கண்டோம்.

மன்னன் முடிதரித்த—சிரம்கொண்டோன் மட்டுமல்ல; மனதிலே, திடம், பேச்சிலே திறம், நடவடிக்கையிலே உறுதி, இவையெலாம் கொண்டவன். எனின் அவன் ஏன், மன்னனாக இரேன் என்று கூறினான் என்றன்றோ கேட்கிறாய்! அது, அவன் கையாண்ட முறை! மன்னனைப் பொம்மையாக்கி வைத்துக்கொண்ட பிறகும், மனக்கொதிப்புத் தீராமல், அடியோடு ஒழித்துக்கட்டிவிட்டு, பீடத்தை வெற்றிடமாக்கி விட்டால் மட்டுமே, எல்லோரும் இந்நாட்டு மன்னராகத் திகழமுடியும் என்று எண்ணிக் கனல் கக்கும் கண்ணினராய், தீச்சொல் உமிழும் வாயினராய், கொலுவிருக்கும் அமைச்சர்களுக்குத் தக்கபாடம் புகட்டவேண்டும் என்று எண்ணினான், மன்னன். அதற்காகவே, மன்னன், நான் அரசபீடத்தில் அமர்ந்திருக்க விரும்பவில்லை—விலகிக்கொள்கிறேன்—என்றுரைத்தான்.

இவன் மதிமிகு மன்னன்! இவனுக்கெனத் துறையில்லை, அலுவல் இல்லை, அதிகாரம் இல்லை! முத்திரை மோதிரம் இருக்கிறது; நமது விருப்பத்தைச் சட்டமாக்கி அதிலே தன் பெயரை, ஆணையினைப் பொறித்திட! இவ்வளவே அவன் பணி! எனினும் இவன், இதுபோதும் என்று எண்ணுபவனாக இல்லை. கலைமான்களையும்,

எல்லோரும் இந்நாட்டு மன்னர் [5]

கலாபங்களையும், கிள்ளைமொழியையும் கிண்கிணி ஒலியையும், வண்ணத் தாமரையினையும் வட்டில் மோகினிகளையும், கண்டும் கொண்டும், காலமெலாம் களிநடம் புரியட்டும் — பணம் பாழாகும் ஓரளவு — எனினும், மக்களை ஆட்டிப்படைத்திடும் வாய்ப்பினை அதிகாரமூலம் பெற விழைவு கொள்ளாதிருந்தால் போதும், என்று எண்ணினர்—அங்ஙனம் எண்ணியே, அரண்மனையில் அரசோச்ச அனுமதித்தனர். இம் மன்னனோ, அரண்மனையோடு தன் அரசோச்சுதல் இருந்துவிடுவதில் மன நிறைவு கொண்டானில்லை. அரசாளவேண்டும், அரசன் என்ற நிலை உண்மை என்றால். இல்லையேல், அரசாள, அரசன் என்ற நிலையையே வேண்டாமென்று விட்டொழிந்துவிடுதல் வேண்டும்—என்று எண்ணினான். அவனைத்தான் பெர்னாட்ஷா, படம் பிடித்துக் காட்டுகிறார், தமது நாடகப் பெருநூலில். புயலார் என்று கூறத்தக்க போக்குடைய, புதிய அமைச்சரை, மன்னன், புன்னகை பூத்த முகத்தினனாக மட்டுமல்ல, அசட்டுச் சிரிப்புக்காரனாகவே, நொடியில் மாற்றி அனுப்பிய காட்சியினைக் கண்டோம். இனி, அமைச்சர் அவை காணலாம்.

முதலமைச்சர், ப்ரோடியஸ் எனும் பெயருடையார். காட்சி மூலம், அவர் போக்கு விளங்கிடும் — அதற்கேற்பப், பொருத்தமான, வசதியான பெயரைத்தேடிச் சூட்டிவிடு, தம்பி! அவருடைய தலைமையிலே அவை கூடுகிறது.

முடிதரித்த மன்னன் பிடியிலே சிக்கிக் கிடந்தது நாடு! அவன் இட்டது சட்டம்! என்ற நிலை இருந்தது. மக்கள், வாயில்லாப் பூச்சிகளாக்கப்பட்டுக் கிடந்தனர். நம் போன்றாரின் உள்ளத்திலே ஓராயிரம் உன்னதமான எண்ணம் எழும் — பயனென்ன? — யாவும் மக்கி மண்ணாகிப் போகும் — அவைதமை மதித்திடான் மன்னன்! கலை அறியான் — எனினும் அவனே கலைக்கூடக் காவலன்! பொருள் ஈட்டும் வழி அறியான்—எனினும் பிறர் திரட்டியதைக்கொண்டு வந்து கொட்டச் சொல்வான், பெருநிதிக்கு உடையோன் ஆவான்! வாளேந்தான் — எனினும் அவனே படைகளுக்கெலாம் தலைவன்எனும் விருதுடையோன் என்பர்! இங்கிலையில் இருந்த முடிஅரசு முறையினை எதிர்த்துப் போரிட்டுப்போரிட்டுக், குடிஅரசுக் கோட்பாட்டினை மெள்ள மெள்ள வெற்றிபெறச் செய்து, கொற்றவன் கொலுவிருக்கட்டும், ஆனால் அரசு நடாத்த, ஆற்றலுள்ளோர் அமைச்சர்களாகட்டும் — அந்த ஆற்றலை அளந்திடும் கோலாக, மக்கள் அளித்திடும் ஆதரவு அமையட்டும்—அந்த ஆதரவு பெறும் முறையாக, தேர்தல் முறை ஏற்படட்டும் என்றெல்லாம், திட்டம் தீட்டி நடைமுறையாக்கி, மன்னனை இன்று, அரண்மனைவாழ் அலங்காரன் என்ற அளவுக்குக் கொண்டுவந்து நிறுத்திவிட்டோம்; உண்மையில் அரசாள்வது நாம் — என்று எண்ணி எண்ணி மகிழ்ந்து கிடப்போர், அமைச்சர்கள். முதலமைச்சரோ, அத்தகைய மகிழ்ச்சியால் மயக்கமுற்று உண்மை நிலைமையை அடியோடு மறந்துவிட்டவரல்ல —மன்னன், எப்படிப்பட்டவன் என்பதை உணர்ந்திருக்கிறார்.

> சென்ற தேர்தலிலே, நாம் மற்ற எல்லாக்கட்சிகளையும் அழித்தொழித்து, இந்த மூன்றாண்டுகளாக அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறோம். ஆனால், இந்த மூன்று ஆண்டுகளும், உள்ளபடி, நாட்டை ஆள்வது, இந்த மன்னன்தான் என்பதை உணர்கிறீர்களா....?

—என்று கேட்கிறார், முதலமைச்சர்!

•

முடி அரசு, நிலைகுலையாமல் இருந்த நாட்களில், அரசன், சிலரை அமைச்சர் ஆக்குவான்—ஆற்றல் அறிந்தேதான் என்பதல்ல — எவ்வகையாலோ, மன்னன் மனதில் இடம் பெற்றவனானால் போதும்! மன்னன் மகிழ மலர் கொடுத்திருக்கலாம் — காட்டு மல்லிகையோ, வீட்டு ரோஜாவோ, ஏதோ ஒரு மென் மலர்!!

அமைச்சர்கள் இருப்பர் — அரசாள அல்ல — அரசன் ஆட்சி நடத்துவான், இவர்கள் எடுபிடிகளாவர், இளித்துக் கிடப்பர்,

முடி அரசு முறையின் கேடு முறிக்கப்பட்டான பிறகு, மன்னன் இருப்பான்—ஆனால், அரசாள்வோனாக அல்ல—முடி தரித்துக் கொலுவிருக்க! அமைச்சர்கள் இருப்பர் — முடி இராது சிரத்தில் — ஆட்சியின் பிடியோ, அவர்தம் கரம் இருக்கும்.

ஷா, குடி அரசுக் காலத்துக் கொற்றவனைத்தான் காட்டுகிறார். எனினும், அவன் எங்ஙனமோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களின் தலைவன், அச்சத்துடன் ஆயாசத்துடன் உணரத்தக்க விதத்தில், வெறும் சின்னமாக இருந்துவிடாமல், ஆட்சியை நடத்துபவனாக இருந்து வருகிறான். இதனைத்தான் முதலமைச்சர், மற்ற அமைச்சர்களுக்குக் கூறுகிறார். கூறுகிறார் என்று சொல்வதற்கில்லை—இந்த நிலையை உணர்ந்திருக்கிறீர்களா, என்று கேட்கிறார்!

> ஒரு அமைச்சர், இந்த அளவு உணர்வு பெறாததால், எனக்கு அப்படிப் புலப்படவில்லை........

என்று கூறிடத் தொடங்கும்போதே, முதலமைச்சருக்கு இருப்புக்கொள்ளவில்லை,

> இதை உணர்ந்துகொள்ள உம்மால் முடியாவிட்டால், விலகிவிடுமய்யா! நிலைமையை உணர்ந்துகொள்ளக் கூடியவர்களுக்கு இடம் கொடும்! இல்லையானல், என் வேலையை ஏற்றுக்கொண்டு, கட்சியை நடத்திச்செல்லும்

என்று பேசுகிறார்.

அமைச்சராயிற்றே! வேறு பல அமைச்சர்கள் முன்னிலையில், முதலமைச்சர் பேசிவிட்டார் என்பதால், கோபம் எழுமல்லவா. எனவே, அந்த அமைச்சர், சற்று முடுக்காக — ஆனால் ஆழ்ந்த அறிவின் துணையுடன் அல்ல—பேசுகிறார்.

> முதலமைச்சர் ஐயா நீர்! முழுமுதற் கடவுள் அல்ல! மன்னன் என்ன செய்ய இயலும் என்கிறீர்? நாம் எதை எப்படிச் செய் என்று புத்திமதி கூறுகிறோமோ, அதைத்தான் செய்யமுடியும். அதிகாரம் அனைத்தும் நம்மிடம் இருக்கும்போது, அந்த மன்னன் எப்படிநாடாள இயலும்? சொல்கிறீரே!!

*

தம்பி! இந்த அமைச்சர் கேட்பது போலத்தான், பெரும்பாலானவர்களுக்குக் கேட்கத் தோன்றும். ஏனெனில், ஒப்புக்கொள்ளப்பட்ட ஏற்பாட்டின்படி, அமைச்சர்களிடமே எல்லா அதிகாரங்களும்—மன்னன் தானாக ஏதும் செய்ய இயலாது. எனினும் இந்த மன்னன், ஒரு முதலமைச்சர் அச்சம் கொள்ளத்தக்க முறையில் அமுல் நடத்துகிறான்! எப்படி?

மன்னனும் அமைச்சர்களும் பேசிடும் கட்டத்தின்போது, இது விளக்கப்பட்டிருக்கிறது—நாடக நூலில். தம்பி! நான் குறிப்புகள் மட்டுமே தருகிறேன்.

குடி அரசுக் கோட்பாடும், கேடு களையப்பட்ட முடி அரசு முறையும் இணைந்ததோர் அமைப்பினைக் குடிக்கோனாட்சி முறை என்று கூறுவர்.

குடிக்கோனாட்சி முறையிலே, அமைச்சர்களே அனைத்துக்கும் பொறுப்பாளர்; மக்களே, ஆட்சி மன்றத்தினரைத் தேர்ந்தெடுப்பர்.

அமைச்சர்கள் ஆட்சிமன்ற மூலம் சட்டங்கள் இயற்றுவர்—திட்டங்கள் தீட்டுவர்—நாடு அவைதமை ஏற்கும்.

இந்த முழு உரிமை அமைச்சர்களுக்கு—எனினும், ஏதேனும் ஓர் சட்டமோ திட்டமோ, செயலோ, முறையோ மக்களுக்கு ஊறு விளைவிக்கும் என்று ஏற்படின், மன்னன், அதனைத் தன் மறுப்பு மூலம் தடுத்து நிறுத்தலாம்.

நாட்டை நடத்திச் செல்ல அமைச்சர்கள்—அவர்கள் நடத்திச் செல்வதிலே, மன்னன் குறுக்கிடவோ, அலுவலிலே பங்கு பெறவோ கூடாது—ஆயினும், நடத்திச் செல்லப்படுவதை, மக்கள் சார்பில், நாட்டின் சார்பிலே, கூர்ந்து கவனித்தவண்ணம் இருந்து, பேராபத்துக்கு நாட்டை இழுத்துச் செல்லும் நிலை ஏற்பட்டுவிடும் என்று தோன்றினால், தடுத்து நிறுத்திட மன்னனுக்கு அதிகாரம் உண்டு.

மன்னர்கள் இந்தத் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில்லை—அநேகமாக.

தேவைப்படுவதில்லை; ஆகவேதான் பயன்படுத்துவதில்லை என்று கூறுவார் உளர்.

தெரிவதில்லை, ஆகவே பயன்படுத்துவதில்லை என்றுரைப்பாரும் உளர்.

பயன்படுத்தத் தொடங்கினால், பிறகு இந்த அதிகாரமும் பறிக்கப்பட்டுப் போய்விடும் என்று அச்சம்—எனவே எந்த மன்னனும், தன்னுடையது என்று குறிக்கப்பட்ட, தடுத்து நிறுத்தும் உரிமையைப் பயன்படுத்துவதில்லை, என்றும் கூறுவர் வேறு சிலர்.

•

தம்பி! இந்த மன்னன், இந்த 'அதிகாரத்தைப்' பயன்படுத்தி, அமைச்சர்களின் உரிமையைப் பாழாக்கினானில்லை.

இவன் செய்ததெல்லாம், சான்றோர் கூடும் இடங்களில், அல்லது மக்கள் மன்றங்களில் பேசும் வாய்ப்புப் பெறும்போது, மன்னனுக்கு உள்ள இந்த அதிகாரத்தைப்பற்றி விளக்கம் தந்து வருவது வாடிக்கை.

மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற நோக்குடன் குடிஅரசு முறை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையின்படி, நாடாளும் பொறுப்பினை ஏற்றுள்ளோர் அமைச்சர்கள். அவர்கள் வழி தவறி நடப்பின், அல்லது முறைகேடான செயலில் ஈடுபடின், தீது தரும் சட்ட திட்டத்தைப் புகுத்திடின், தடுத்து நிறுத்த, மன்னருக்கு அதிகாரம் உண்டு. எனவே அமைச்சர்களின் ஆட்சியிலே என்ன கெடுதல் ஏற்பட்டுவிடுமோ என்று மக்கள் கலக்கமடையத் தேவையில்லை—மன்னன் இருக்கிறார், தடுத்து நிறுத்திடும் வல்லவராக!

இம்முறையில் பேசிக்கொண்டிருந்தார் இந்த மன்னர்.

இந்தக் கருத்துப்பட இதழ்கள் எழுதியவண்ணம் இருந்தன—அந்த இதழ்களில் மன்னனுக்குத் தொடர்பு உண்டு!!

அமைச்சர் அவையின் மதிப்பு, இதன் காரணமாகக் குறையும் அல்லவா?

இவர்களைக் கண்காணிக்க ஒரு மேலோன் இருக்கிறான்.

இவர்கள் ஏதேனும், தெரிந்தோ தெரியாமலோ, தவறுகள் செய்துவிடக் கூடும் என்பதால், அந்த மேலோனிடம், இறுதி அதிகாரத்தை—தடுத்திடும் உரிமையை—ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஆகவே, அந்த மேலோன்தான், உண்மையில், மக்களின் பாதுகாவலன்!!

தம்பி! இந்தக் கருத்துக்களைத்தான், காவலன், பேச்சு விளப்பியபடி இருந்தது.

அமைச்சர்கள், தவறு செய்யக்கூடியவர்கள்—தவறு செய்கிறோம் என்று தெரியாமலேகூட தவறுகளைச் செய்துவிடக்கூடியவர்கள் — எனவே தான், ஒரு மேலோன், இருக்கிறான், தடுத்து நிறுத்த! அந்த மேலோன், எது நாட்டுக்கு, மக்களுக்கு, தீது பயக்கும் நன்மை பயக்கும், என்பதை அறிந்திடும் ஆற்றல் படைத்தவன்—தடுத்து நிறுத்திடும் தகுதி படைத்தவன்!—

குடிஅரசு முறையையும் நடத்திக்கொண்டு, இந்தக் கோட்பாட்டையும் ஏற்றுக்கொண்டு இருப்பது, முரண்பாடாக மட்டுமல்ல, சிறிதளவு தரக்குறைவாகவேகூடத் தோன்றும்.

மமதை, மந்தமதி, அக்கரையற்ற போக்கு, இவைகள் காரணமாக, தன்னிச்சையாக நடக்கும் மன்னன், நாடு கேடுறக்கூடிய காரியமாற்றுவான்—எனவே கட்டுப்படுத்தவேண்டும், மட்டுப்படுத்த வேண்டும்—என்று ஆர்த்தெழுந்து பலர் பேசிப் பேசிக், கிளர்ச்சி பல நடாத்திக், கொடுமைகளை ஏற்றுக்கொண்டு, இறுதியில் பெற்றது, எல்லோரும் இந்நாட்டு மன்னர்—எனும் குடிஅரசுக் கோட்பாடு!

எனினும் அமைச்சர்களையும், கண்காணித்துவர, தவறுகச் சென்றால், தடுத்து நிறுத்திட ஒரு மேலோன் உண்டு!—அந்த மேலோனாக ஒரு மன்னன் இருந்துவருவான், என்பது, முடிஅரசுக் காலத்திலே தரப்பட்டிருந்ததைவிட, வலிவான அதிகாரம் என்று, முதலமைச்சர் கருதினார்.

எனவே, மன்னன், இனி அந்த 'உரிமை'யைப் பற்றி, எங்கும் பேசக்கூடாது, என்று உறுதிமொழி தந்தாகவேண்டும்—என்பது முதலமைச்சரின் திட்டம். அந்தத் திட்டத்துக்கு மன்னன் ஒப்பம் அளித்தாக வேண்டும் என்று வலியுறுத்தவே, அமைச்சர் அவை கூடிற்று. அரண்மனையில் ஓர் பகுதியில்.

*

அமைச்சர் அவையில் என்னென்ன போக்கினர், நோக்கினர், உளர், என்பதைப் பெர்னார்ட்ஷா, எடுத்துக்காட்டுவதைப் படிக்கும்போது, நகைச் சுவைக்காக இருக்குமோ, என்று எண்ணத் தோன்றும். ஆனால் அதுதான் உண்மையான நிலைமை, எந்த அமைச்சர் அவையிலும் என்பது, தம்பி! எண்ணிப் பார்த்திடும் எவருக்கும் புரியும்.

ஐவர் கொண்ட அமைச்சர் அவை! இதில் இடம் பெற்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயல்பினர்! அம்மட்டோ! ஒருவரைக் குறித்து ஒருவர், கொண்டுள்ள கருத்துக்களோ, வேடிக்கை வேடிக்கையானவை! தமக்கன்றி மற்றவர்களுக்கு, தகுதியும் திறமையும் இல்லை, அமைச்சராக இருக்க—என்பது ஒவ்வொருவருக்கும் உள்ள எண்ணம்.

உற்றார் உறவினருக்கு, வரம்புமீறிப் பதவிகள் கொடுப்பவர் என்று ஒருவரைப்பற்றி மற்றவர், புகார் கூறிக் கொள்வர்.

நம்மால் மட்டுமே இந்த அமைச்சர் அவை செயல்படுகிறது, அமைச்சர் அவை ஏற்படத்தக்க விதமான வளர்ச்சி கட்சிக்கு ஏற்பட்டது, என்று ஒவ்வொரு அமைச்சருக்கும், உள்ளூர எண்ணம்.

முதல் அமைச்சருக்கோ அமைச்சர்கள் அனைவருமே, இடம்பிடித்துக் கொண்டவர்கள், என்ற எண்ணம்!

இதனை விளக்கிடும் பான்மையிலே, அமைச்சர்களின் பேச்சினை, அழகுற அமைத்தளிக்கிறார். ஷா. கருத்து வேற்றுமைகளை எடுத்துக் கூறிக்கொள்வதிலே, கட்டுக்கு அடங்கும் தன்மையும் கைவிடப் பட்டு விடுவதுகண்டு, முதலமைச்சர், மன்னனை எண்ணிக்கொள்கிறார்.

*

தம்பி! நாடகத்திற்கு ஷா சூட்டியுள்ள பெயர் ஆப்பிள் கார்ட் (Apple Cart) என்பது; தமிழில் இதற்கொப்பான பெயரிடவேண்டுமெனின், நெல்லிக்காய் மூட்டை எனலாம்.

மூட்டைக்குள் இருப்பதால், உருண்டோடிவில்லை; அவிழ்த்துவிட்டால், திக்கொன்றாக உருண்டோடிவிடும்!

தீர்த்துக்கட்டி விடவேண்டும் முடிஅரசு முறையை! சின்னமும் கூடாது! முழுக்க முழுக்கக் குடி

அரசு மலரவேண்டும்!—என்று முழக்கமிட்டு அமைச்சரான புலவர் — ஒருவர்! இன்னொருவர், பெரிய முதல்போட்டு நடத்தப்படும் தொழிற்சாலை முதலாளியின்,கையாள்! இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சீர்கேடு!

இந்தச் சீர்கேடுகளை அறிந்து, தக்கபடி பயன்படுத்திக்கொண்டு, தன் தலைமையைக் காப்பாற்றிக் கொண்டுள்ள முதலமைச்சர்.

மன்னன் இதனை நன்கு அறிவானே — இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்வானே, என்ற கவலை, முதலமைச்சருக்கு.

மன்னர்களுக்கு மதி ஏது! என்று எண்ணுபவர் —அதிகாரம் ஏது! என்று நினைப்பவர்—ஏது செய்ய இயலும்!! என்று பேசுபவர்—எதற்காக இப்படி ஒரு பதுமை! என்று ஏளனம் பேசுபவர் — இப்படித்தான் அமைச்சர்கள் உளர்!

முதலமைச்சரோ, இந்த மன்னன், மதிமிக்கவன், வாய்ப்பினை நழுவவிடாது காரியம் செய்பவன், என்று உணர்ந்திருக்கிறார்.

மனதிலே திடமும் தெளிவும் கொண்டவன் மன்னன். தெளிவற்ற பத்துப் பேர்களைக்கூடத், தெளிவும் திடமும்கொண்ட ஒருவன் வீழ்த்திவிட முடியும். மன்னன் அப்படிப்பட்டவன். நீங்கள், ஒருவருக்கொருவர் மாறுபாடுகளைக் குறித்துக் கூச்சலெழுப்பிப்,பிளவுபட்டு நிற்பீரேல், மன்னன் பாடுதான் கொண்டாட்டம் என்பதனை முதலமைச்சர் எடுத்துக் காட்டுகிறார்.

தபால்துறை, எதனையும் இயக்குவிக்கும் வலிவுத் துறை, எனும் இரண்டினையும், மாதர்களிடம், ஒப்படைத்திருக்கிறார், பெர்னார்ட்ஷா, நாடகத்தில்!!

இந்த இருவரும், அமைச்சர் அவை கூடிடும் போது, உடனிருந்திருக்க வேண்டும்—எனினும், ஷா தீட்டிய நாடகத்தில், இந்த இரு பெருமாட்டிகளும் அமைச்சர் அவைக்கு, மன்னர் வரும்போதுதான், அவருடன் வருவதாகக் காட்டியிருக்கிறார்!

அமைச்சர் அவை நடைபெற்றுக்கொண்டிருக்கும் கூட்டத்துக்கு, மன்னன், இந்த இரு மாதர்களும் இருபுறம் இருக்கும் நிலையிலேதான், வந்து நுழைகிறார்.

மன்னன், பேச்சாற்றல் மிக்கவன் என்பதை, தம்பி! முன்பே கண்டிருக்கிறாய்—ஆனால் அவனுடைய முழு ஆற்றலை, இங்குதான், காணவேண்டும்.

என்னை வந்து காணும் உரிமையை,
அமைச்சர் குழுவினரே! ஒருசேர நீவிர்
இன்று பயன்படுத்தி எனக்குக் களிப்பூட்
டிடும், காரணம் யாதோ! நாம் அதைக்
கேட்டு இன்புறலாமோ!

என்று பேச்சைத் துவக்குகிறார் மன்னர்.

முதலமைச்சர், சுற்றி வளைத்துப் பேசாமல் அமைச்சர் அவையின் முடிவை எடுத்துக் கூறுகிறார்.

அதைத்தொடர்ந்து,சுவைமிக்க உரையாடல்கள் நடைபெறுகின்றன.

எமது ஆட்சியிலே, மக்கள் வாழ்வில் வளம் பெற்று மகிழ்கிறார்கள் என்கின்றனர் அமைச்சர்கள்.

வாழ்வில் வளமா? யாருக்கு மக்களுக்கா! இல்லையே! தொழில் அதிபர்கள் அல்லவா கொழுக்கிறார்கள்! என்றெல்லாம், சுட்டிக்காட்டிக் கேலி செய்கிறார் மன்னர்.

கடைசியில், இனிக், கட்டுக்கு அடங்கி நடந்து, கொள்வதாக, இறுதி உறுதிமொழிச் சீட்டிலே மன்னன் கையொப்பமிடவேண்டும் — அதனைப் பெறாமல் அமைச்சர் அவை கலையப்போவதில்லை, என்று முதலமைச்சர் அறிவிக்கிறார். அரசன், உறுதி மொழிகள் யாவை என உசாவுகிறான்.

*

மன்னர் இனி, சொற்பொழிவாற்றக்
கூடாது!

அப்படியா! அமைச்சர் அவை தயா
ரித்துக்கொடுக்கும் சொற்பொழிவுகளைக்
கூடவா நான் படித்துக் காட்டக்கூடாது!

ஆமாம்....ஆமாம்........அதை வைத்துக்
கொண்டே, படிக்கும் முறையிலேயே,
கேலியும் கண்டனமும் எழச்செய்துவிடக்
கூடிய திறமைசாலி, நீர்—தெரியும்!

வாயைத் திறக்கவே கூடாதா? ஊமை
யாக இருக்கவேண்டும், உங்கள் மன்னர்!
அப்படித்தானே!

ஒருவிதத்திலே, அப்படித்தான். அர
சியல் பேச்சுகளைப் பொறுத்தவரையிலே,
மன்னர் ஊமையாகத்தான் இருக்கவேண்
டும். ஏதாவது திறப்புவிழாக்களிலே,
வேண்டுமானால், இதைத் திறந்துவைக்
கிறேன் என்று கூறலாம்.

சரி! மற்றும், நான் செய்யவேண்
டியது?

பத்திரிகைகளில் கட்டுரைகள், செய்தி
கள், எழுதக்கூடாது.

நானு எழுதுகிறேன், இல்லையே....

உங்கள் தூண்டுதலால், எழுதப்பட்டு வருவது தெரியும்.

நீங்கள் கூடத்தான் எழுதுகிறீர்கள்.

நாங்கள் எழுதுவோம்! நீர் எழுதக் கூடாது!

என்ன நியாயமோ!! சரி! ஆகட்டும்! பிறகு?

தடுத்து நிறுத்தும் உரிமை, அதிகாரம் இருந்துவருகிறதே, அதை அடியோடு விட்டுவிடவேண்டும்.

அந்த அதிகாரத்தை நான் பயன் படுத்தவே இல்லையே, இதுவரையில்.

அதைப்பற்றிப் பேசுகிறீர்........

ஆமாம்! மக்களாட்சியிலே அமைச்சர்களுக்கு உள்ள அதிகாரம், உரிமை பற்றி, நீங்கள் பேசுகிறீர்கள். அதுபோல், மன்னனுக்கு உள்ள அதிகாரத்தைப் பற்றி நான் பேசினுல், என்ன?

நாங்கள் பேசுவோம், நீர் பேசக் கூடாது.

இந்த உறுதிமொழியில் நான் கையொப்பமிடுவது, மிகக்கடினம். ஏனெனில், கையொப்பமிட்டுவிட்டால், அதன்படி நடக்கவேண்டும். என்ருல், ஏதும் செய்யாமல், பொம்மையாக இருந்துவர இயலாதே.

மீறக்கூடாது. உறுதிமொழியில் கையொப்பம் இடத்தான்வேண்டும்.

மறுத்தால்?

மறுத்தால்! அமைச்சர் அவை, 'ராஜிநாமா'ச்செய்யும். பொதுத்தேர்தல்! என் கட்சி மக்களிடம் சென்று, கட்டுக்கடங்கிய காவலன் வேண்டுமா, கண்மூடித்தர்பார் வேண்டுமா' என்ற பிரச்சினையைவைத்துப், போட்டியிடும், வெற்றி எமது கட்சிக்கே!!

*

தம்பி! மக்களே, இந்தப் பிரச்சினை மூலம், கட்சி தன் வயப்படுத்திக்கொள்ளும் என்பதை உணரமுடியாதவன் அல்ல, மன்னன்.

எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்க்கிருன், இந்த ஏற்பாடு வேண்டாம்—என் இயல்புக்கு ஏற்றதல்ல—என்றெல்லாம்.

முதலமைச்சருக்கு இந்தப் பிரச்சினையே, மன்னன் பிடிவாதம் காட்டுவது, தன் கட்சிக்குப் பெருத்த இலாபமே பெற்றுத் தரும் என்பது நன்ருகத் தெரியும். எனவே, உறுதியுடன் பேசுகிருர்.

பொதுத் தேர்தலை, இவ்வளவு விரைவிலே வைத்துக்கொண்டால், பெருஞ்செலவு, மறுபடியும்!! இந்தக் கவலை சில அமைச்சர்களுக்கு—குறிப்பாக, புதிதாக அமைச்சரானவருக்கு.

பல கட்டங்கள், உள்ளன, இந்தக் காட்சியில்.

அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் தூற்றிக்கொள்வது முதற்கொண்டு, 'தொடர்புகள்'பற்றிய புகார்கள் வரையிலே! ஒவ்வொன்றும் படித்திட இனித்திடும், என்பது மட்டுமல்ல—வரிக்கு வரி, குடிஅரசு, தக்கபடி நடைமுறைக்குக் கொண்டுவரப்படாவிட்டால், வெறும் கேலிக்கூத்தாக்கப்பட்டுப் போய்விடும் என்பது போன்ற அரசியல் விளக்கங்களைப் பெறலாம், பிறிதோர் சமயம், விரிவாகக் கூறிடக்கூட எண்ணுகிறேன்—இப்போது நாம், விரைவாக, இறுதிக் கட்டம் கண்டாகவேண்டும்.

*

முடியை மாற்றிக்கொள்ளப் போவதில்லை.

ஆம்! உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டே தீரவேண்டும்.

வேண்டாம் முதலமைச்சரே! மன்னன், என்ருேர் சின்னம் இருப்பது நாட்டுக்கும் நல்லது! உங்களுக்கும் நல்லது!

உபதேசம் வேண்டியதில்லை! உமது கையொப்பம், உடனே—தயங்காமல்......

என்ருல் முடியாது அமைச்சரே!

முடியாது என்ருல், பொதுத் தேர்தல்! மன்னரின் முறைகேடுபற்றி மக்களிடம் சொல்லுவோம்—ஆதரவு திரட்டுவோம்......

என் இயல்பு, இதற்கு இடம் கொடுக்காது; உங்களுக்கோ ஒரு ஊமை மன்னன் வேண்டும்!

குடிஅரசு முறையால் அமைச்சரான உமக்கு, ஒரு சிறு துளி அதிகாரம் கொண்ட அரசனையும் சகித்துக்கொள்ள விருப்பமில்லை, குடிஅரசுக்குக் கட்டுப்பட்ட காவலன் வேண்டும், உமக்கு.

அதுதான்! சரியாகச் சொன்னீர். குடிஅரசுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் காவலன் வேண்டும்.

என்ருல் அப்படி இருக்க முடியாதே!

எங்கள் முடிவு அது!

உங்கள் முடிவு நியாயமானது.

அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மகிழ்ச்சி! சரியான முடிவுக்கு வந்துள்ளீர்! இடும் கையொப்பம்!

உறுதிமொழியிலா? அது என்னால் முடியாதே! கட்டுப்பட்டுக் கிடக்க இயலாது!

கட்டுக்கு அடங்கும் மன்னன் தேவை என்ற எங்கள் முடிவு நியாயமானது என்று ஒப்பம் அளித்தீர்!

ஆமாம்! அதை மறுக்கவில்லையே! ஆனால், அப்படி, நான் இருக்க முடியாது என்கிறேன்.

அப்படியானால்......?

சிக்கலான நிலைமை! நான் மன்னனாக இருப்பதானால், நீங்கள் சொல்கிறபடி கட்டுண்டு கிடக்க முடியாது. எனவே, நான் ஓர் முடிவுக்கு வந்துவிட்டேன்.

உறுதிமொழியில் கையொப்பமிட்டச் சம்மதம்......அப்படித்தானே......

இல்லை! உறுதிமொழியில் கையொப்பமிடக் கூடிய, மன்னனைத் தருகிறேன்......என் மகன்... உங்களின் இன்றைய இளவரசன்!

அப்படியானால், தாங்கள்?

நான் அரசப் பதவியைத் துறந்துவிடுகிறேன். என் மகன், மன்னனாவான். உம் விருப்பப்படி, உறுதிமொழி தருவான்......

காவலா! உம்மை இழக்கத்தான்வேண்டுமா?

வேறு வழி? சிக்கல் தீர நான் விலகுவது தான் முறை......

கூடிக் கலந்து பேச வந்தோம், பிரிவு உபசாரக் கூட்டமாகி விட்டதே, இன்று.

உமது அன்புக்கு என் நன்றி!

கொள்கையால் நாம் பிரிகிறோம்—எனினும், உமது அறிவாற்றலை நாங்கள் மறவோம். இனிச் செல்லவேண்டியது தானு,வெவ்வேறு வழியாக...

'ஏன், வெவ்வேறு வழி! நானல்லவா, உங்கள் வழிக்கு வந்துவிடத் தீர்மானித்துவிட்டேன்......

மன்னர் பதவியைத் துறந்து, பிறகு, யாது செய்யவல்லீர், அரசே!

அரச பதவியில் இருக்கும்போது செய்ய இயலாததையெல்லாம் செய்திடலாமே......

என்ன கூறுகிறீர் வேந்தே!

என்பேச்சு முற்றுப் பெறவில்லை, அமைச்சரே!

நான் அரச பதவியைத் துறப்பேன்—என் மகன் உமதுகட்டுக்கு அடங்கும் மன்னனாவான்! மக்களால் தேர்ந்தெடுக்கப்படும், பெருவாரிக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து, அந்தக் கட்சியினர் ஆணையின்படி நடந்துகொள்வான். நான் பதவியிலிருந்து விலகுமுன், என் அதிகாரத்தைக்கொண்டு, எனக்குள்ள அரச குடும்பத்துக்கான தனி உரிமைகள், சலுகைகள் ஆகியவற்றை நீக்கிக்கொண்டு, சாதாரணக் குடிமகனாகிவிடப்போகிறேன்.

கொற்றவன், குடி மகனாவதா?

குடிமகனாவதற்காகத்தானே, நான் கொற்றவனாக இருக்கும் நிலையையே துறக்கிறேன்.

ஏன்? எதற்கு? என்ன செய்யத் திட்டமிடுகிறீர்?

உம்மோடு உறவாட மகிழ! உடனிருக்க! அடுத்த பொதுத்தேர்தலில், சாதாரணக் குடிமகனாக ஈடுபட!

வெற்றி நிச்சயமல்லவா மன்னருக்கு!

எதிர்த்து எவர் போட்டியிடுவர்!

வெற்றி பெறக்கூடும்! ஏன்! நான் ஒரு கட்சியைத் துவக்கி, தலைவனாகித், தேர்தலில் போட்டியிடக்கூடும். இப்போது, நான் மன்னன் என்று இருப்பதால், என்னைக் குற்றம் கூறிப்பேச உம்மால் முடியவில்லை. எனக்கும், மன்னனாக இருப்பதால், அமைச்சர்களின் அவலட்சணங்களை எடுத்துப் பேசமுடியவில்லை. குடிமகனானால், இருவருமே, தாராளமாக, காரசாரமாகக் கண்டனக் கணைகளை ஏவிக்கொள்ளலாம்...

இதெல்லாம் எதற்கு மன்னவா!

எதற்கா! என் கட்சி, மகத்தான வெற்றிபெற! உமது உறுதிமொழியில் கையொப்பமிட்டுக் கட்டுண்டு கிடக்கும் காவலன், என் மகன், எந்தக் கட்சிக்கு அதிக இடம் கிடைக்கிறதோ, அந்தக் கட்சித் தலைவனை அழைத்துத்தானே அமைச்சர் அவை அமைக்கச் சொல்லி, அதன் ஆணைக்கு அடங்கி நடப்பான்! என் கட்சி அத்தகைய வெற்றிபெற்றால், என்னையே அழைத்து, அமைச்சர் அவை

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

வெளிவருகிறது.

விலை விவரம் அடுத்த இதழில்.

அமைக்கச் சொல்லக்கூடும்! குடிமகன் ஆகிவிட்டால், அமைச்சரே! கொற்றவனாக நான் இருக்கும்போது கிடைக்காத வாய்ப்பு, வலிவு, எனக்குக் கிடைக்கிறது!!

*

தம்பி! இந்த உரையாடல், அமைச்சர் அவையினருக்கு அதிர்ச்சியை, அச்சத்தை, வெகுவாக, எப்படி ஏற்படுத்தாமலிருந்திருக்க முடியும்? ஏதேது இவன் அசகாயசூரன்! மன்னனாக இருப்பதாலாவது, இந்த அளவுக்குக் கட்டுப்படுகிறான் — இவன் குடிமகனாகி, கொற்றவனாக இருந்து அந்தப் பெரும் சிறப்பினையே துச்சமென்று துறந்த தியாகி, வீரன், மக்கள் தொண்டன் என்ற பெயரும் பெற்றுத், தேர்தலில் ஈடுபட்டால் எவரே அவனைத் தடுக்கமுடியும்! ஆட்சி அவன் கரம் செல்லும்! முடி அரசு, மகன் மூலம்! குடிஅரசு தந்தை மூலம்! இதற்கு இடமளித்தால், நாம் யாரும் தலை தூக்கவே முடியாது—என்று எண்ணினர் — வியர்த்தனர்—வெடவெடத்துப் போயினர்.

முதலமைச்சர் ஒரு முடிவுக்கு வந்தார்.

மன்னா! அந்த உறுதிமொழிப் பத்திரம் எங்கே? என்று கேட்டார். நான் கையொப்பம் இடவேண்டிய பத்திரம்தானே; இதோ!—என்று கூறியபடி, பத்திரத்தை, மன்னன், தந்தான். முதலமைச்சர், அதைச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தபடி, அமைச்சர் அவைக் கூட்டம் கலைகிறது!—என்று கூறிவிட்டுச் சென்றான்!!

*

தம்பி! மன்னன் என்னென்ன எண்ணிச் சிரித்திருப்பான், என்பதைக் கற்பனை செய்து பார்க்கப் பார்க்கச் சுவை சொட்டும் அல்லவா!

முடி அரசாகட்டும் குடி அரசாகட்டும், அதை நடாத்திச் செல்வோரின் திறமையைப் பொறுத்தே, அந்த முறைமூலம் பெறத்தக்க பலன், சுவை, கிடைக்கும். வெறும் முறையினால் மட்டும், போலிச்சுவைதான் கிடைக்கும்; காகிதப்பூவாகத்தான் இருக்கும்; கவர்ச்சி இருக்கும் வண்ணத்தால், மணம் கிடைக்காது.

கொற்றவனைக் குட்டிக் குட்டிக் குனிய வைக்கக் கிளம்பினான், குடிஅரசு முறையைக் கருவியாக்கிக் கொண்டவன்; கூர்ந்த மதிபடைத்த கொற்றவனோ, நான் குடிமகனாகிக் கோலோச்சும் பேறு பெற்றிருந்தபோது இருந்ததைவிட ஏற்றத்துடன் இருந்திடுவேன், என்பதைக் குறிப்பிட்டுக் காட்டினான்—குடிமகனாக வேண்டாம்! கொற்றவனாகவே இருந்துவிடு!!—என்று கூறுமற் கூறிவிட்டுச் சென்றான், குடிஅரசு முறையால், தலைமை பெற்றவன்.

குடிஅரசு, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கொள்கையைத் தருகிறது.

அந்தக் கொள்கையைச் சாதகமாக்கிக்கொண்டு, எவரெவர் அந்த இடத்தைப்பெற்று, என்னென்ன செய்யக்கூடும் என்பதை எண்ணிப்பார்த்துத், தெளிவு தேடிப்பெறவே, இதுகுறித்து, பன்னிப் பன்னிச் சொன்னேன்.

தம்பி! முன்பு கொற்றவன் என்ற நிலையிலிருந்து கொண்டு, ஆதிக்கம் செலுத்த இருந்த வாய்ப்பினை விட, இன்று குடிமகன் என்ற நிலையில் இருந்து கொண்டு, நல்லது செய்யவும், வாய்ப்பு அதிகம்; கேடு செய்திடவும் வழி கிடைத்துவிடுகிறது.

எனவே, மமதை, மந்தமதி எனும் கேடுடைக் குணம்கொண்ட மன்னன் நாடாள்வது, தீது தரும் என்பதால், **எல்லோரும் இந்நாட்டு மன்னர்** என்ற ஏற்புடைய, குடிஅரசுக் கோட்பாட்டை நிலைபெறச் செய்துவிட்டதாலேயே, ஆட்சியிலே சீரும் சிறப்பும், மக்கள் வாழ்விலே நலனும் தாமாக வந்து தழைத்திடும் என்று எண்ணிவிடுவது, பேராபத்து. முன்பாவது ஒருவர் மன்னர்! இன்று எல்லோரும் மன்னர்கள்! எனவே, எல்லோருக்குமே, ஆட்சி நடாத்தத்தக்க அறிவாற்றல் இருக்கவேண்டும், அதே போது ஆணவம் இருத்தல் ஆகாது—திறம் இருக்க வேண்டும், தலைக்கனம் இருத்தலாகாது!

இந்தப் பண்புகள் உள்ள சில பலரிடம், சிலபல குறிப்பிட்ட காலத்துக்கு, ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப், பொதுமக்கள், உழவு, நெசவு, தொழில் தொண்டு, கலைகல்வி, களியாட்டம் எனும் பல்வேறு செயல்களில் ஈடுபட்டு, நல்வாழ்வு, முழு வாழ்வு, பெறவேண்டும்! அவர்கள் அத்தகைய நல்வாழ்வு பெறத்தக்க சூழ்நிலையைத் தக்கபடி ஆக்கிக், காத்து, அழிந்துபடாது பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பை ஏற்றுத், தன்னல மறுப்புடன் நடந்திடும் பேராற்றல் வளர்ந்தால்தான் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற சுவைமிகு கொள்கை, பயன்தரும் முறையாகி நிற்கும்...... அதற்காகப் பணியாற்ற, எங்கோ, யாரோ உளர், வருவர், என்று எதிர்பார்த்து நின்று, பிறகு இல்வுகாத்த கிளியாகிப் போய்விடலாகாது. அதற்கான பணியாற்றும் கடமை, நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

அண்ணன்,

அண்ணாதுரை

புதிய மேலிர்

19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (4-12-60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 21

திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை நகர மன்றத்துக்கு 45-உறுப்பினர்களை அமர்த்தும் வாய்ப்பினைச் சென்னைவாழ் மக்களின் ஆதரவால் பெற்று, இப்போது மூன்றாம் முறையாகவும் நமது கழகத்தவரே நகர மேலராகவும், துணை மேலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை, தோழர் வி. முனுசாமி அவர்கள் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு நடப்பு ஆண்டுக்கான மேலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நகராட்சியில் நெடு நாட்களாகப் பயிற்சியும் தொடர்பும் உடையவர் என்பதோடு, தம்முடைய சலியாத உழைப்பினால் பலருடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். இயக்கத்தவரேயன்றி அயலவரும் பாராட்டும் வகையில், இள நகையும் இன்சொல்லும் கொண்டு தொண்டாற்றும் தூயவர். கழகத்தின் கண்ணியம் காத்துக் கடமையாற்றிடும் கட்டுப்பாடு உடையவர். அடுத்துச் செய்யும் முயற்சிகளால் எடுத்த செயல் முடிக்கும் செயல் ஆற்றல் படைத்தவர். இவரது பணியால் சென்னை மாநகராட்சிமன்றம் பல நன்மைகளைப் பெற்றுள்ளது. இனியும் பெறவேண்டும்; பெறும்—அதிக அளவில்—எல்லாரும் பாராட்டத் தக்கவகையில்.

துணை மேலராகப் பொறுப்பேற்றுள்ள தோழர் செல்வராஜ் அவர்களும் நல்ல தொண்டர். மக்கள் தொடர்பு உடையவர். கழகத்தின் கருத்தில் ஊறி விட்டவர். அதோடு பொதுத்தொண்டு செய்வதில் கட்சிகளுக்கு அப்பால் நின்று பணிபுரியும் நல்லவர். மேலர் மேற்கொள்ளும் பணிகளில் இவர் அவர்க்குத் துணைநின்று தொண்டாற்றிப் புகழும் பெருமையும் பெறுவார் என்பதில் ஐயமில்லை.

சென்ற ஆண்டு மேலராகவும், துணைமேலராகவும் இருந்த தோழர்கள் அப்துல்காதர், தேவராசன் ஆகியோர் நகரமன்றத்தின் வரலாற்றில் தங்கள் பெயர் நிலைக்குமாறு நல்ல பணிகள் ஆற்றினர். குறிப்பாக ஏழை எளிய மக்களின் நெஞ்சத்தில் இடம்பெற்று விட்டனர்.

செல்லுகின்ற மேலர்களை வழியனுப்பி வந்துள்ள மேலர்களை வரவேற்கின்றோம்; வாழ்த்துகின்றோம்; பாராட்டுகின்றோம்.

இந்த நேரத்தில்,

எதிர்க்கட்சியினர்க்கு ஒரு சொல்:-

திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவு உயர்ந்த பதவியைப் பெற்றாலும், தன் நிலை மாறாது—தருக்கெண்ணம் கொள்ளாது — எதிர்க்கட்சியினரை மதிக்கும் போக்கிலிருந்து விலகாது—மக்களுக்கு நல்லதென்று தோன்றும் பொதுவான நல்ல பணிகளை யார் கூறினாலும் வரவேற்று அவற்றை முடித்துத் தருவதில் எப்பொழுதுமே ஒத்துப்போகும் தன்மையும் பண்பும் கொண்டுள்ளதென்பதனை இந்தச் சமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். பெரும்பான்மை பலம் இருக்கின்ற காரணத்தை முன்னிறுத்தி, எதிர்க்கட்சியினரின் நல்ல யோசனைகளையும் திட்டங்களையும் ஏற்க மறுத்து வழிமாறும் கூடாக் கோட்பாடு என்றைக்கும் நம்மை அண்டாது என்பதனையும் இங்கு குறிப்பிட்டுச், "சென்னை மாநகரின் எழிலுக்கு ஏற்ற பணிகளைச் செய்வதில் கட்சிக் கண்ணோட்டமின்றிப் பொது உள்ளம் பெற்றுப் பணியாற்றுவேன்" என்ற புது மேயரின் பொன்மொழியைக் காப்பாற்றும் வகையில் எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்க முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

நாளிதழ்களுக்கு ஒரு சொல்:-

நடப்பதை வெளியிடுவது உங்கள் பணி; நடந்ததை நடந்தவாறு உரைப்பது இதழ் அறம். அதை விடுத்து, இது இதுஇப்படி ஆகவேண்டும் என்று நீங்கள் எண்ணுவதையெல்லாம், நடந்ததாக வெளியிடுவது அறம் அன்று. பிளவு, பிரிவு என்றெல்லாம் பேத புத்தி காட்டிக் கற்பனையை எழுத்தாக்கி விற்பனைசெய்ய முயலவேண்டாம். நெடுநாட்களுக்கு நிலைக்கும் பெயரும், புகழும் ஒரு இதழுக்கு இருக்கவேண்டிய முதற்பொருள். ஊதியம் கருதி இழுக்கு உண்டாக்கும் வினைசெய்ய வேண்டாம் என்று கூறுகிறோம்.

இம்முறை நடைபெற்ற மேலர் தேர்தலைப்பற்றி மாற்றுக் கட்சியினரும், மனத்திலே மாசுகொண்டு

இதழ்களும் கதை கதைகளாக எழுதின. இருப்பதைவிடுத்து, இல்லாததும் பொல்லாததுமாக எழுதியும் பேசியும் வந்தனர். இதனுல் பொதுமக்கள் பலர் 'அப்படியும் ஆகிவிடுமோ' என்று எண்ணினர். மக்கள் மனதிலே பொய்த் திரையை—பனிப்படலத்தை—எழுப்பிட முனைந்தன—சில இதழ்கள்.

எனவே, கட்சிக்குள்ளே பிளவு கற்பித்து வேடிக்கை பார்ப்பதில் விருப்பம் கொண்ட இதழாளர்களும் பேச்சாளர்களும், இனிமேலாவது இப்போக்கினை மாற்றிக்கொள்ளவேண்டும்—நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிருேம்.

தூய பொது நோக்கோடு செயல்படவேண்டிய இடங்களில் இருப்பவர்கள்—அவர்கள் யாராயினும் சரி—அவை எந்தக் கொள்கையையுடைய இதழாயினுஞ் சரி, எதிர்க் கட்சிகளிடத்தில் ஏதாவது குறை காணப்பட்டால், அந்தக் குறையை எடுத்து வைத்து, இதில் இன்ன தவறுளது; இதனை இதனுல் திருத்திக்கொள்க என்று எடுத்துக்காட்டினுல், அதில் கண்ணியம் இருக்கிறது—கருத்துப்பொலிவு மிளிர்கிறது—எனவே இஃதன்றே மனித இயல்புக்கு மகுடஞ்சூட்டுவதாகும் என்று எடுத்துப்பேசும் வகையில் இதழ்கள் தங்கள் எழுத்துக்களை ஓடவிடவேண்டும். அதனை விடுத்து, இல்லாததை இட்டுக்கட்டியும், நடவாததையும் நடந்ததாகக் கூறியும், நடக்க இயலாததை நடக்கப்போகிறது என்று சாதித்தும் பொதுமக்களைப் பாதை மாறச் செய்யலாம் என்று நினைப்பது தனக்குத்தானே குழிதோண்டிக்கொள்வது போலாகும். ஆகையால், இனியும் அந்த ஆகாத போக்கினை மேற்கொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொண்டு, நகருக்கு நல்ல பல பணிகளைச் செய்யும் வாய்ப்பினைப் பெற்றுப் பெரியதொரு பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கும் புதிய மேயருக்கும், துணை மேயருக்கும் உறுதுணையாக, நம்மைப் போலவே மற்ற எல்லோரும் முன் வரவேண்டுமென்று விரும்புகின்ருேம். வாழ்க மேலரும் துணை மேலரும்! மலர்க நல்ல பல வளம் நகருக்கு!!

*

4-ம் பக்கத் தொடர்ச்சி

எனக்கென்ன, கோபம், இராமன் பேரிலோ, சீதையிடமோ? நான் சொல்வது, தவரு, சரியான்னு கேட்டுப்பார்த்து, உண்மையை நீங்களே தெரிந்துகொள்ளுங்களேன்... என்னை, ஏன் இப்படிச் சுட்டுத் தள்ளிவிடுவதுபோலப் பார்க்கிறிங்க. இராமனும் சீதையும் அண்ணன் தங்கை! அந்த அண்ணன் தங்கைக்குத்தான் திருமணம்! இதுதான், ஜாவாவிலே, இருக்கற இராம நாடகம்!!

பொன்னி! உண்மையாகவா சொல்றே? ஜாவாவிலே, இப்படியா இராமாயணம்?

ஆமாம்! ஏன், அதை உங்களவர், சொல்லவில்லையா...

இல்லையே! ஜாவாத் தீவிலே கூட, நம்மோட இராமாயணத்துக்கு மதிப்பு இருந்திண்டிருக்காம்னு சொன்னர்.

அந்த ஜாவா இராமாயணத்திலே, இராமனும் சீதையும், அண்ணன் தங்கைன்னுதான் இருக்கு. ஜாவா போய்வந்தவா எழுதி இருக்கிற புத்தகம் கொடுத்தனுப்பறேன் நீங்களே படித்துப் பாருங்க...

போதும்டியம்மா! எனக்குத் தலையே சுத்தறமாதிரியா இருக்குது. வம்புவல்லடிக்காரன் கண்டபடி, எதைஎதையோ எழுதி வைத்துவிட்டிருக்கிருன். இதையெல்லாம் யார் நம்புவது?

அதேதான் நான் சொல்வது. பழய காலத்திலே, மனம்போன போக்கிலே, யாராரோ, எதை எதையோ எழுதிவைத்துவிட்டா, அது எல்லாம், இப்பவும் சரியாத்தான் இருக்கும்னு பிடிவாதம் பிடிக்கலாமா...? கூடாது என்பது தான், என் கொள்கை.

என்னமோடிம்மா, இராமன் என்ருல் மகாவிஷ்ணு என்றும், சீதை என்ருல், சாட்சாத் இலட்சுமிதேவி என்றும், பெரியவா சொல்லிச் சொல்லி, என்னைப் போல் கோடானுகோடி பேர்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்குது; அவ்வளவுதான்! எதை எதையோ பேசி, சொல்லி, என்னைப்போன்றவாளோட நம்பிக்கையை நாசமாக்கிவிட வேணும்.

'பெரியவா' இதுமட்டுமா, சொல்லி இருக்கா!! சீதை மண்—இராமன் புல்! அல்லது பயிர்!—அப்படியும் ஒருவர் சொல்லி இருக்கிருரே...

அது யாரடிம்மா, அவர்! இராமனைப பயிர்ன்னும், மண்ணுன்னு மகாலட்சுமியான சீதையையும் சொன்ன புண்யாத்மா...

அப்படிக் கேளுங்களேன்; புண்யாத்மாவான மகாத்மா காந்தி இருந்தாரே, அவருடைய மதிப்பைப் பெற்று, மகாகவி என்றும்,மகரிஷி என்றும் பெயரெடுத்த ரவீந்திரநாத் தாகூர், சொன்னதை நான் சொன்னேன்,

தாகூரா, அப்படிச் சொன்னுர்...

பொய் சொல்லுவேனு? தாகூர், அதுபோல, எழுதியே இருக்கிருர். நாலு நாளைக்கு முன்னுலேகூட, நம்ம பட்டு வீட்டிலே அந்தப் புத்தகம், இருந்தது, பார்த்தேன்......

பட்டுவும், இதுபோலப் புத்தகமெல்லாம்தான், படிக்கிருளா?

அவ படிக்கருளோ இல்லையோ, எனக்குத் தெரியாது. புத்தகம், பட்டு மேஜையின் பேரிலே இருந்தது, பார்த்தேன்......

நான், படித்துப் பார்த்தான பிறகு, மறுபடியும், உன்னேடு பேசிக்கொள்கிறேன்......

நான், அதுவரைவிலே, வாயைத் திறக்கல்லே, அது விஷயமாக...... நானே, கொண்டுவந்து தருகிறேனே, புத்தகத்தை......

வேண்டாம், வேண்டாம், எனக்கு வழி தெரியும் போக...... என்னடி வீதியிலே, ஒரே கூச்சல்......எதை ஒழியணும்னு கூச்சல்... இப்பத்தான், இது ஒழியணும் அது ஒழியணும் என்கிற கூச்சலா கேட்கிற காலமா இருக்குதே......

ஆமாம்! இப்ப, எது எது கெடுதல் என்று தெரியுதோ, அதை, மக்களே எதிர்த்து ஒழித்தாத்தானே, முடியும். சக்கராயுதம் வருமாமே, புராண காலத்திலே கெட்டதை அழிக்க, அப்படியா, வரும், இப்போது......

வராதடி பொன்னி! நிச்சயமா வராது! நீங்களெல்லாம் இருக்கற உலகத்துக்கு, பகவான், அனுப்புவாரா, அவரோட சக்கராயுதத்தை...

ஏன் அனுப்பக்கூடாது...எங்களை அனுப்பினவர், அவரேதானே......

என்னமோ, தவறி அந்தக் காரியம் செய்துவிட்டார்னுதான் சொல்லனும்......

பகவானு, தவறு செய்துவிட்டார்! ஐயயோ! நீங்கக்கூடப் பாபமான பேச்சுப் பேசறிங்களே......பேசலாமோ......

பேசப்போறதில்லே பொன்னி; இனி! ஓங்கிக் கன்னத்திலே அறையப் போறேன்......

அப்படித்தான் அறைந்துகொண்டார்களாம், பக்தர்கள், வடகலை—தென்கலைச் சண்டையிலே. காஞ்சிபுரத்திலே இருந்து, கண்ணுசாமி என்கிற போலீஸ்காரர் வந்தார்—பக்கத்து வீட்டுக்கு—அவர் சொன்னர். வடகலையையும் தென்கலையையும், பிரித்துவிட்டு; சண்டையைத் தடுக்கறதுக்குள்ளே, போலீசார்பாடே, திண்டாட்டமாயிட்டதாம்......ஏன் தெரியுமோ? அவர்களிலேயே, சிலபேர், தென்கலை நாமம், சிலபேர் வடகலை!! சிரிப்பை அடக்கிக் கொள்கிறீர்களா......உம்! சத்தமிட்டுச் சிரித்தால்தானு, சிரிப்பு......

பொன்னி! இந்த மாதிரிக் காரியமெல்லாம், தவறு; கண்டிக்க வேண்டியதுதான். எல்லோரும் பகவானுக்குச் சமம். இதிலே, தென்கலை நாமமா, வடகலையான்னு சண்டை போட்டுக்கொள்வது, பைத்யக்காரத்தனம்......

அப்படி நீங்க சொல்லலாம். அவர்களைக் கேட்டா, எங்களுடைய உன்னதமான உரிமைக்காக நாங்களெல்லாம், உயிரையும் இழக்கத் தயாராக இருக்கிறோம் என்று பேசிவிடுவாளே. பக்தி! வேதம் படிப்பதும், திருவாய்மொழி ஓதுவதும், பக்தியிஞல்தானே......

ஆமாம்......இரு! இரு! பொன்னி! என்ன இது? வரவரச் சத்தம், பலமாயிண்டிருக்கு..ஐயோ! ஐயோன்னு கூச்சல் கேட்கறது...போலீஸ் விசில் சத்தம்கூட......

ஆமாம்......என்ன இது...இங்கும், ஏதாவது, வடகலை தென்கலையா......

ச்சீ! வா, போய்ப் பார்ப்போம்...

நமக்கு ஏன் அந்தக் கஷ்டம்...... இதோ, பட்டு வருகிருளே...அவ, எல்லாவற்றையும் நேரிலே, பார்த்துவிட்டுத்தானே வந்திருப்பா......

பார்த்தேன், பார்த்தேன், எனக்கே ஒன்றும் புரியல்லே......

பட்டு பார்த்திருக்காளாம், புரியல்லையாமே......இதென்ன அதிசயம்...

பட்டு! என்ன நடந்தது......என்ன கூச்சல்......

என்னன்னு சொல்றது. ஒரு தரப்பிலே பார்த்தா, பஜனை நடந்தது—அதைச் சிலருடைய தூண்டுதலின் பேரில், போலீசார் அடித்து இம்சித்து, பக்திமான்களின் மனதையும் புண்படுத்தி, உடலையும் காயப்படுத்திவிட்டார்கள் என்று சொல்லனும் இன்னொருதரப்பிலே, வாதிப்பதானல், ஒரு காலிக்கூட்டம், கண்ணியமானவர்களைக் கேவலப்படுத்தி, வெறிக் கூச்சலிட்டது; அதைக் கண்டு வேதனைப்பட்ட "பெரிய மனிதர்கள்" தடுத்தபோது, மீறிப் பலாத்காரத்தில் ஈடுபடவே, அந்தக் காலிக்கூட்டத்தை, போலீசார் அடித்து விரட்டி, அமைதியை நிலைநாட்டினர்கள் என்று சொல்லவேண்டும்......

அடா, அடா, அடா! பட்டு, நீ, வக்கீல் வேலைக்குப் படிச்சதும் போதும், எங்களோட, பிராணனை வாட்டி எடுக்கறதும் போதும். தெருவிலே என்ன கூச்சல்னு கேட்டா, சுருக்கமா, தெளிவா ஒரு பதில் சொல்லக் கூடாதோ? உடனே, வக்கீலாக மாறிவிடறியே...விஷயத்தைச் சொல்லு...

விஷயமா... தெருவிலே சிலபேர், பஜனை செய்துகொண்டு போரு—அவர்களைப் போலீசார், அடித்து விரட்டிக்கொண்டு இருக்கிரு...அடி, பஜனைக் கூட்டத்தின் பேரிலே மட்டும் அல்ல, வேடிக்கை பார்க்கச் சென்றவர் மேலேயும் விழுந்தது......

பட்டு! இதென்ன, கண்மூடித்தர்பாரா, இருக்குதே! கேட்டயா, பொன்னி! பஜனை செய்துகொண்டு போகிறவர்களைப் போலீஸ் அடிக்கிறதாமே...அக்ரமமா இருக்குதே...

அப்படியும் சிலபேர் கேட்கிரு...... ஆனல், பெரியவாளெல்லாம், போலீஸ் செய்தது நியாயம்னு பேசிக்கொண்டிருக்கிருளே!...

பட்டு! விளக்கமாச் சொல்லு...

பொதுவாக! உம்! அதாவது, வாதி, பிரதிவாதி என்று இரண்டு கட்சிகளாகக் கவனிக்காமல்......அப்படித்தானே...

ஆமாம்......ஆமாம்...பணம், யார் கொடுப்பார்கள் என்று கவனிக்காமல், நடந்ததைச் சொல்னு...

சரி! முதலிலே, கண்டதைச் சொல்கிறேன். பஜனைக் கோஷ்டியைப் போலீஸ் துரத்தித்துரத்தி அடிக்கிறது. விரண்டு ஓடிவிடாமல், பஜனைக் கோஷ்டி, அடியையும் வாங்கிக் கொண்டு இடையிடையே, பஜனையையும் நடத்துகிறது. கடைவீதிப் பக்கத்திலிருந்து ஆரம்பமாகி இருக்கிறது, இந்த அமளி!

பஜனைசெய்தால், போலீசுக்கு என்னவாம்?

போலீசுக்கும், பஜனைக்கூட்டத்துக்கும், நேரடியாக ஒரு விரோதமும் கிடையாது. பஜனைக்கூட்டத்தை அடித்து விரட்டி, தங்களைக் காப்பாற்றும்படி, கடைவீதியிலே உள்ள கனதனவான்கள், புகார் தொடுத்ததால்தான், போலீசே, வந்தது.

போதும் பட்டு, புதிர் போடுவது, விவரமாச்சொல்லு, விளங்கும் முறையிலே......

நடந்தது இதுதான். ஆனல், பஜனைக்கூட்டம் கடைவீதியிலே, என்ன பாடிக்கொண்டிருந்தது தெரியுமோ...

ஏதோ, அவாளுக்குத் தெரிந்த பகவன் நாமாவளியை! ஜே! ஜே! விட்டலாவோ! அல்லது, கந்தா! கடம்பாவோ! எதுவாக இருந்தால் இவர்களுக்கு என்ன?

இவர்களுக்கு என்ன, என்று நீ, கேட்கலாம், நான் ஒப்புக்கொள்ளலாம். ஆனல், கடைவீதியிலே உள்ள கனதனவான்கள் எதைப் பாடிஞல் என்ன என்று சும்மா இருந்துவிட முடியுமோ......

கேட்டயா, பொன்னி! இவ சொல்கிற, நியாயத்தை. வீதியிலே அவாளவா, அவாளவாளுக்கு, விருப்பமான முறையிலே பகவானைப் பஜித்துக்கொண்டுபோரு...அதிலே, என்ன தவறு...சொல்லு, பொன்னி!

அப்படிப் பொதுப்படையாச் சொல்லிவிடலாமா......முருகன் சன்னதியிலே நின்றுகொண்டு, தீராதவல்வினையைத் தீர்த்துவைப்பான் கோவிந்தா என்று பஜனை செய்தால், முருகனைச் சேவிக்க வந்தவர்கள், சும்மா இருப்பார்களா?

பொன்னி, மிக முக்கியமான 'பாயிண்ட்' பேசியிருக்கா. இப்ப, அவரவர்கள், அவரவர்கள் விருப்பப்படி, சாப்பிடலாம். சட்டம் தடுக்காது. ஆனல், சைவர்கள் வீட்டிலே குடி இருந்துகொண்டு கருவாடு வறுத்தால் சரியா...

கடவுளைப்பத்தின விஷயம்டி, பட்டு இது! கருவாடு வரையிலே, போய் விடாதே!

கடவுள், கருவாடு, எதுபற்றியவழக்காக இருந்தாலும், சட்டம் என்ருல் சட்டம்தான்......ஏன் பட்டு! அப்படித்தானே...

சரியான வாதம்! நான் சொன்னனே, சைவர் வீட்டிலே குடிஇருந்துகொண்டு, கருவாடு வறுப்பதுபற்றிய விஷயம்; இது வெறும் பேச்சுக்குச் சொல்லவில்லை. பெரிய கோர்ட்டுக்கு வந்த வழக்கு. பரப்பரப்பான வழக்கு

பிறப்பு

மதுரை மாவட்டத் தி. மு கழகச் செயலாளர் எஸ். முத்து அவர்கட்கு 19—11—60-ல் ஆண்மகவு பிறந்து தாயும் சேயும் நலம்.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15
இல்லம் ...118

......வீட்டை விட்டுக் காலிசெய்யச் சொல்லி, வழக்கு......வாடகையை ஒழுங்காகக் கொடுக்கற வரையிலே, காலிசெய்ய வேண்டியது இல்லை — சட்டம் இடம் தராது என்று ஒரு பக்கம் வாதம்; மற்றொரு பக்கத்திலே, சைவம் கெடும்படி, சைவரின் மனம் புண்படும்படி, சாப்பாட்டு முறையை வைத்துக்கொண்டு இருப்பவரை, வீட்டைவிட்டு வெளியேற்ற, வீட்டுச் சொந்தக்காரருக்கு, சட்டம் உரிமை தருகிறது என்பது வாதம்.

முடிவு என்ன, அதைச் சொல்லி உன் வக்கீல் வேலையை நிறுத்தேண்டி பட்டு!

முடிவா? அப்பீல் கோர்ட்டிலே, போனபிறகு வீட்டுச் சொந்தக்காரர் பக்கம் தீர்ப்பு! வீட்டைவிட்டு வெளியேற வேண்டியதுதான், கருவாடு சுட்டுத் தின்பவர், என்று.

பட்டு! அப்பீல் கோர்ட்டிலே, தீர்ப்பளித்தவர், யார்? சாஸ்திரியா, சர்மாவா, ஐயங்காரா...

சம்பூர்ணனந்த தீட்சிதர்! ஏன்? அவருடைய பெயரைக் கேட்கிறே பொன்னி! தீட்சிதர். புலிடி, சட்டத்திலே...

அடி அம்மா, வக்கீல்! கருவாட்டின் பேரிலே புலி பாய்ந்தது போதும், இதோடு நீ கடைவீதி விஷயத்தைச் சொல்லு.

நான், இதைச் சொன்னது, காரணம் இல்லாமல் அல்ல. ஒருவரோ, பலரோ, வேண்டுமென்றே ஒருவருடைய மனதையோ பலருடைய மனதையோ புண்படுத்தவேண்டுமென்று எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும், சட்டப்படி தடுக்கலாம், என்பது பொதுவாக யாரும் ஒத்துக்கொள்ளவேண்டியதுதானே...

ஆமாம்... இப்ப நாம் பேசிக்கொண்டிருப்பது, பஜனை செய்தவர்களைப் போலீஸ் அடித்து விரட்டலாமா? அப்படி ஒரு சட்டம் உண்டா? என்பது. அதை மறந்துவிட்டுப் பேசாதே. இந்த இலட்சணத்திலே, நீ, வக்கீலாகி என்ன குப்பைகொட்டப்போகிருயோ தெரியவில்லை.

பஜனை செய்தால், அடித்துவிரட்டச் சொல்லி சட்டம் இல்லை...

அரசியல் கூட்டங்களுக்குத் தடை போடும்போதுகூட, பஜனைமட்டும் நடத்தலாம் என்று அனுமதி தருகிருர்களே......

பொன்னி சொல்வது சரியான பாயிண்ட்! சட்டம், மத விஷயத்திலே தலையிடாது—கூடுமான வரையில்....

ஆனு, இப்ப, சட்டம் பஜனை செய்கிறவர்களை, போலீசைவிட்டு அடிக்கச் சொல்கிறது... ஏன்ஞ, நம்மவா, ராஜ்யம் நடத்தருளே... அதனலே...

அப்படி ஒன்றும் இல்லை. நடந்தது பஜனை என்ருலும், அது பெயரளவிலேதான் பஜனையாக இருக்கிறதே யொழிய, உண்மையிலே, அது பஜனை அல்ல... பஜனை என்ற பெயரால் கடைவீதியில் உள்ள கனதனவான்களை இழிவுபடுத்தும், வெறிச்செயல்......

அதெப்படி? என்ன பட்டு! புதுவிதமான புதிராக இருக்கிறது, உன் பேச்சு.

சாதாரணமானவர்களுக்கு, சட்டத்தை எடுத்து விளக்கம் பேசும்போது, புதிர்போலத்தான் இருக்கும். பஜனை செய்தார்களே அவர்கள், நடத்தியது பஜனையாக இருந்தால், கடை வீதியில் உள்ள கனதனவான்களுக்குக் கடுங்கோபம் வராது. போலீசுக்குச் சொல்லி அனுப்பி இருக்கமாட்டார்கள். சிலபேர், பஜனை என்ற பெயருடன், வேண்டுமென்றே, கனதனவான்கள் கடைவீதியிலே செய்து வரும் வியாபாரத்தையும் தொழிலையும், இழிவுபடுத்தவும், கேவலப்படுத்தவும், முயற்சி எடுத்துக்கொண்டனர்......

அப்படியா... அது எப்படி?

பஜனை செய்வதாகச் சொல்லிக்கொண்டு, பண்டரிநாதன், பார்வதிலோலன், பன்னிரு கையன், இப்படி, பகவானைப்பற்றிய திருப்புகழ், காவடிச் சிந்து பாடி இருக்கலாம், அல்லவா?

ஆமாம். பஜனை என்ருல், அது தான். அதுவும் பாடத் தெரியாதவர்கள், அரே ராமா, அரே கிருஷ்ண என்று சொன்னுல்கூடப் போதும்.

ஆமாம்......அது பஜனை... ஆனல் இவர்கள் பஜனையா செய்தார்கள். என்ன பாடிக்கொண்டு, கடைவீதியிலே உலாவினர்கள் தெரியுமோ... கள்ள மார்க்கட் நடத்தாதே! கடவுளுக்கு இது பொறுக்காதே! அநியாய விலை விற்காதே! ஆண்டவனுக்கு இது அடுக்காதே!— இப்படிப் பாட்டு! இதற்கு, மேளம், தாளம், ராகம்!!

இது பஜனையாகாது, பட்டு! ஆனல் கள்ளமார்க்கட் கூடாது, கடவுளுக்கு அடுக்காது என்று பாடுவது, நல்ல உபதேசம்தானே—என்று தோன்றுகிறதே......

பட்டு! பகவானை, பஜனைசெய்து, அவரவர்கள் தமக்கு நல்லகதி தேடிக்கொள்ளுவதைக் காட்டிலும், ஊராருக்கு நல்லதுதேட, இப்படிப் பாடி பஜனை நடத்துவது சிலாக்கியமான காரியம்தானே.

அப்படியும், வாதிடலாம்...வாதாடி வழக்கிலே, ஜெயிக்கலாம். அதுவேறு விஷயம். ஆனல் கடைவீதியிலே, இப்படிப் பாடுவது, அங்கு உள்ளவர்களைக் கேவலப்படுத்துவது ஆகாதா...

அதெப்படி ஒரேயடியாக அப்படிச் சொல்லிவிட முடியும்?

இவர்கள் பாடுகிருர்கள், இதைக் கேட்டு, பலர், வியாபாரிகளைப் பார்த்துச் சிரிக்கிருர்கள் — கேவலப்படுத்துகிருர்கள். பாட்டா அது! பஜனையா அது! இருப்பதை மறைத்தால் இடிவிழும்— தலையில் இடிவிழும்! கடையில் இருப்பது! சரக்கு இருப்பதை! இருப்பதை மறைத்தால் இடிவிழும்! என்று இவர்கள் பாடிய போது, அங்கு இருந்தவர்கள், கையைக்காட்டி, அந்தக்கடை முதலாளி தலையில்தான் இடிவிழும்! என்று பேசினர்கள், என்பதற்குச் சாட்சிகள் இருக்கின்றன.

பட்டு! சாட்சி விஷயம் இருக்கட்டும். இந்தப்பஜனை நடத்தியது, யார்?

விசாரித்தேன். யாரோ, போதுமறை மன்றம் நடத்துகிருர்களாமே...

ஐயயோ! என் தம்பி நடத்தும், மன்றம் அது, அதையா போலீஸ் அடிக்கிறது?

பொன்னி! உன் தம்பியா, பஜனை நடத்தியது. விடக்கூடாது. கேஸ் போடவேண்டியதுதான்... அதெப்படி அடிக்கலாம் போலீஸ்? ஊருக்கு நல்லது வேண்டும் என்ற உத்தமமான நோக்கம்கொண்டு, பாடியவர்களை...

பட்டு அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்......நான் போய், தம்பியைப் பார்த்தாக வேண்டும்.

வா! வா! எல்லோருமே போவோம்.

போவதுமட்டுமா, பாடிக்கொண்டே போவோம், போய்க்கொண்டே, பாடுவோம்........

☆

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.